# முஸ்லிம் சிறுபான்மை நாடுகளில் இஸ்லாமிய இளைஞர்களை நெறிப்படுத்துவதில் இமாம் பதீஉஸ் ஸமான் ஸயீத் நூர்ஸியின் சிந்தனைகள்: (ரஸாஇலுன் நூர் நூலை மையப்படுத்திய ஆய்வு)

# Thoughts of Badiuz Zaman Nurzi in reform Islamic Youths in Minority Countries: ( A Research based on the book Rasa – el – Annoor)


**Mr. MT. Habeebullah (1) and Mr. MHA. Munas (2)**

(1)Department of Arabic Language, South Eastern University of Sri Lanka
(2) Department of Arabic Language, South Eastern University of Sri Lanka
(habeeb09@gmail.com)



**ஆய்வுக் சுருக்கம்**

*இளைஞர்கள் எனப்படுவோர் ஒரு தேசத்தின் மிகப் பெரிய பெறுமதி மிக்க சொத்தாக மதிக்கப்படுகின்றனர். ஒரு நாட்டின் எதிர்கால மறுமலர்ச்சியின் பிரிக்கமுடியாத முதுகெலும்பாகவும் சமூக மாற்றத்தின் முன்னோடிகளாகவும் அவர்களே திகழ்கின்றனர். “முதியோர்கள் எனது பிரச்சாரப் பணியில் என்னைக் கைவிட்டபோது இளைஞர்களே எனக்கு கைகொடுத்து உதவினர் என்று முஹம்மது (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.[140]உஸ்மானிய கிலாபத்தின் அந்திம காலப்பகுதியில் “துருக்கிய இளைஞர் இயக்கம்ஜி என்றொரு அமைப்பு தோற்றுவிக்கப்பட்டு அது மதச்சார்பற்ற சிந்தனைகளையும் உஸ்மானிய கிலாபத்தை உடைப்பதற்கான நடவடிக்கைகளிலும் நேரடியாக ஈடுபட்டது. இதனைத் தொடர்ந்து இளைஞர்களின் சிந்தனைகளில் பிழையான எண்ணக்கருக்கள் துருக்கியலும் அதனைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியிலும் பரவலடைய ஆரம்பித்தது. இந்த வகையில் இன்றைய இளைஞர் சமூகத்திடையே பிழையான சிந்தனைகளும் பல வகையான சீரழிவுகளும் குறிப்பாக, சிறுபான்மை முஸ்லிம்களைக் கொண்ட இலங்கை போன்ற நாட்டில் அவற்றின் வேகம் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்கலாம். “போதை வஸ்த்துப் பாவனை போன்ற நடவடிக்கைகளின் விளைவால் அவர்களில் பெருந்தொகையானோர் சிறைகளிலும் சீர்திருத்த முகாம்களிலும் புனர்வாழ்வு வழங்கப்படுவதையும் மீள்பார்வை என்ற பத்திரிகை சுட்டிக்காட்டிசெய்தியினை வெளியிட்டிருந்ததுஜி. [141]இத்தகைய இளைஞர்களை நெறிப்படுத்துவதற்கான சிந்தனைகள் பல மட்டங்களில் பேசப்பட்டு தீர்வுகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இளைஞர்களின் சமகாலத்தின் தேவைகளை உணர்ந்து அவர்களின் அறிவு மட்டங்களை தட்டியெழுப்பும் பாங்கிலும் தத்துவாத்த ரீதியிலும் அணுகும் முயற்சிகள் மிக அரிதாகவே காணப்படுகிறது. எனவே, இந்த ஆய்வு இமாம் பதீஉஸ் ஸமான் நூர்ஸியின் “ரஸாஇலுன் நூர்ஜி இன் ஒரு தலைப்பான “மறுமையின் வெற்றியை நோக்கிய இளைஞர்களுக்கான வழிகாட்டிஜி என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்கின்றது. இமாம் பதீஉஸ் ஸமான் நூர்ஸி நவீன இஸ்லாமிய முன்னோடிகளில்துருக்கியை பிறப்பிடமாக கொண்ட குறிப்பிடத்தக்க ஒரு ஆளுமை. இலங்கை போன்ற நாட்டில் வாழும் இஸ்லாமிய இளைஞர்களை சீரழிவிலிருந்து பாதுகாக்க இமாம் அவர்கள் முதன்மைப்படுத்தி முன்மொழிந்துள்ள விடயங்களை அதன் சாத்தியப்பாடு தொடர்பாக இவ்வாய்வு அலசுகிறது. எனவே, இவ்வாய்வு முதலாம் நிலைத் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகியவற்றை ஆய்வு மூலங்களாகக் கொண்டு பண்புசார் பகுப்பாய்வு முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கையிலுள்ள இஸ்லாமிய இளைஞர்களை நெறிப்படுத்துவதற்கு இமாம் நூர்ஸியின் சிந்தனை அரபுலக முன்னோடிகளைக் காட்டிலும் சாலப்பொருத்தமானதாக அமையும் என்பதை பல நியாயப்படுத்தல்களுடன் இவ்வாய்வு முன்வைக்கிறது.*



**திறவுச் சொற்கள்:** *சிறுபான்மை, இளைஞர்கள், சீர்திருத்தம், சிந்தனை, செல்வாக்கு*


[140].இமம் அபூதாவூத்” சுனனு அபூ தாவூத்” பக் 28
[141] .மீள்பார்வை 2013 July

## அறிமுகம் (Introduction):

நவீன இஸ்லாமிய முன்னோடிகளில் ஒருவரான இமாம் பதிஉஸ் ஸமான் ஸஈத் நூர்ஸி 1877 இல் துருக்கியின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள நூர்ஸி எனுமிடத்தில் பிறந்தார். உஸ்மானிய சாம்ரஜியம் ஆட்டங்காண காண ஆரம்பித்த காலப்பகுதியிலும் காலனித்துவ ஆதிக்கம் மலிந்து அராஜகம் தலைதூக்கியிருந்த ஒரு காலப்பகுதியிலும் ஒரு சீர் திருத்தவாதியாக (முஜத்தித்) இருந்து இஸ்லாத்திற்காக தன்னை முழுமையக அர்ப்பணித்த ஒருவராக இவர் விளங்குகறார். அரபு,அரபு அல்லாத அறிஞர்களிடம் கல்வி பயின்று இஸ்லாமிய கலாஞானத்திலும் சமகால உலகத்தின் போக்குகள் (Trends) தொடர்பான தர்க்க ரீயான அறிவியல் பின்புலத்தையும் கொண்டு விளங்கிய ஒருவராக நூர்ஸி காணப்பட்டார்.

சீர்திருத்தவாதியாக இருந்த இமாம் நூர்ஸி சமகால மனிதர்களை சீர்படுத்துவதில் அவருக்கென்று ஒரு தனியான வழிமுறை காணப்பட்டது. அவரின் இஸ்லாமிய அழைப்பின் போக்கில் தனித்துவமான வழிமுறை அன்றைய சூழலில் பலரின் கவனத்தை ஈர்த்ததுடன் மதச் சார்பற்ற சூழலில் த.்.வாவுக்கான தனி பிக்ஹின் போக்கை வரையறுப்பதாகவும் காணப்பட்டது. “1917க்குபின்புள்ள சூழலில் இஸ்லாத்திற்கு எதிரான மதச்சார்பற்ற சிந்தனை மத்தியாசியக் குடியரசுகளில் கம்யூனிஸ சக்திகளால் முன்கொண்டு செல்லப்பட்ட போது அதனால் இளைஞர்கள், யுவதிகள்ஏனைய இஸ்லாமிய உம்மா அங்கத்தவர்கள் அனைவருமே தமது அடையாளங்களை தொலைக்கவேண்டிய சூழல் தோன்றியது. இதேவேளை துருக்கியில் உருவான நூர்ஸியின் பாடசாலை மதச்சர்பற்ற சிந்தனைகளின் கோளாறுகளைப் புரிந்துகொள்ளவும்முஸ்லிம் உம்மாவை மீண்டும் இஸ்லாத்தை நோக்கி கொண்டு செல்வதிலும் அதனைப் பாதுகாப்பதிலும் பேருதவியாக அமைந்தது”[142]

இமாம் நூர்ஸியின் ‘ரஸாயிலுன் நூர்’ இஸ்லாத்தை அறிவியல், தர்க்க ரீதியாக புரிந்து கொள்வதற்கான சிறந்ததொரு வழிகாட்டலை முன்வைக்கிறது. அதன் ஒரு பகுதியாகவே ‘மறுமையின் வெற்றிக்கானஇளைஞர்களுக்கான வழிகாட்டி’ என்ற நூல் அமையப்பெற்றுள்ளது. இளைஞர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை யதார்த்த ரீதியாக எடுத்துக் காட்டி அதற்கான தீர்வுகள் இவ்வாறுதான் அமைய வேண்டும் என்ற பரிந்துரைகளையும் இந்நூல் முன்வைத்துள்ளது. இமாம் அவர்கள் எல்லாப்பகுதிகளிலும் சீரழிந்து போயுள்ள இளைஞர்களை தத்துவார்த்த ரீதியிலும் எளிமையான உதாரணங்களின் வழியாகவும் இஸ்லாத்தை நோக்கி திசை திருப்புவதில் வெற்றி கண்டுள்ளார்.

இந்த ஆய்வு நூர்ஸியின் இந்த சிந்தனைகள் முஸ்லிம் சிறுபான்மை நாடுகளிலுள்ள இளைஞர்களை சீர்படுத்துவதில் எத்தகைய பொருத்தப்பாடுகளைக் கொண்டுள்ளது என்பதை ஆய்வு செய்வதை வரையறையாகக் கொண்டுள்ளது.

## ஆய்வின் நோக்கங்கள் (Objectives):

1. இளைஞர்களின் நெறிபிறழ்வையும் அவர்களைச் சீர்படுத்துவதன் அவறியத்தையும் உணர்த்துதல்
2. இளைஞர்களை நெறிப்படுத்த இமாம் பதீஉஸ் ஸமான் நூர்ஸி முன்வைத்துள்ள சிந்தனைகளைப் புரிந்து கொள்ளல்.
3. சிறுபான்மை நாடுகளில் இஸ்லாமிய இளைஞர்களை நெறிப்படுத்துவதில் இமாம் நூர்ஸியன் சிந்தனையின் அவசியத்தை விளங்குதல்
4. இமாம் நூர்ஸியின் சிந்தனைகளை இளைஞர்களிடம் முன்னெடுத்துச் செல்வதிலுள்ள சவால்களை அல்லது தடைகளை இனங்காணல்.

## ஆய்வு முறையியல் (Methodology):

இவ்வாய்வு முதலாம் நிலைத் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகியவற்றை ஆய்வு மூலங்களாகக் கொண்டு பண்புசார் பகுப்பாய்வு (Descriptive Analysis) முறையில் மேற்க்கொள்ளப்படுகின்றது.

1. **முதல் நிலைத் தரவுகள்** (Primary Data)
   - (அ) மூல நூல் (Fundemental source)
   - (ஆ) நேர்காணல் முறை

2. **இரண்டாம் நிலைத்தரவுகள்** (Secondary Data)
   - (அ) நூல்கள்
   - (ஆ) சஞ்சிகைகள்
   - (இ) பத்திரிகைகள்

## ஆய்வின் மையம் (Theme of Research):

**(கலந்துரையாடலும் கண்டுபிடிப்புக்களும் - Discussion and Findings)**

### (1) தற்காலத்தில் இளைஞர்களின் நெறிபிறழ்வும் சீர்திருத்தத்தின் அவசியமும்:

இன்று இளைஞர்களிடையே குறிப்பாக முஸ்லிம் இளைஞர்களிடையே பல தரப்பட்ட அமைப்புக்களில் சீரழிவுகளும் பாதிப்புக்களும் மலிந்து காணப்படுகின்றன. இதனால் சமூகத்தில் புறவயப்பட்ட எதிரிடையான பாதிப்புக்கள் (Negative Impacts) தோன்றுவதும் தவிர்க்க முடியாத அம்சமாக மாறியுள்ளது. இச்சீரழிவுகளில் சில மனிதநேய பண்புகளுக்கே விரோதமான

[142] . 2010 கார்டும் சூடானில் நூர்ஸி பற்றிய மாநாட்டில் உஸ்தாத் உஸ்மான் அவர்களின் நூர்ஸி பற்றிய உரையின் ஒரு பகுதியில் இருந்து.

பொதுவான சீரழிவுகளாகவும் மற்றும் சில இஸ்லாமிய மார்க்கத்திற்கு ஒவ்வாத ஒவ்வொரு முஸ்லிம் ஒதுங்கியிருக்க வேண்டிய சீரழிவுகளாகவும் காணப்படுகின்றன. சமூகத்தில் புரையோடிப்போயுள்ள இவ்விரு வகையான சீரழிவுகளும் அவசியம் தவிர்க்கப்படவேண்டிய அம்சங்களாகும்.இந்த வகையில் இஸ்லாமிய இளைஞர்களிடையே பரந்துபட்டுக் காணப்படுகின்ற சீரழிவுகள் எவை என்பதையும் அவற்றைக் களைவதும் அவசியத்தையும் இங்கு நாம் நோக்குவோம்.

1. **அகீதா ரீதியான சீரழிவு:** இது ஒவ்வொரு முஸ்லிமின் நம்பிக்கையுடன் சம்மந்தப்பட்ட அடிப்படை கோட்பாடு. இது முஸ்லிமின் உயிர் நாடியாகவும் நெசிழ்ச்சிப் போக்கை கைக்கொள்ளமுடியாத ஓர் அம்சமாக காணப்படுவதுதே அகீதாவாகும். இன்று இலங்கை முஸ்லிம் இளைஞர்களிடையே அகீதாவில் தளர்வும் அதற்கு முரண்பட்ட சிந்தனைகளும் அவர்களிடையே ஆதிக்கம் செலுத்தியுள்ளன. எனவே, இத்தகைய முரண்பாடுகளை நீக்கி சீரான அகீதாவைக் கொண்ட இளைஞர் சமூகத்தை உருவாக்க வழி செய்வது அனைவரினதும் தலையாய கடமையும் பொறுப்பும் ஆகும்.

2. **இபாதாக்களில் பின்னடைவு:** மனித சமூகத்தை அல்லாஹ் படைத்ததன் நோக்கமே அல்லாஹ்வுக்கு இபாதத் செய்யவே ஆகும். இதனை புனித அல் குர்ஆன் விளக்கும் போது ''ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே அன்றி நான் படைக்கவில்லை''[143]என்ற இறை வசனத்தின் மூலம் இபாதாவின் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது. எனினும் இன்றைய இளைஞர்களில் பலர் இபாதாக்களில் அசட்டையாக இருப்பதைக் கண்டு கொள்ள முடியும். ''இபாதாவில் வளர்ந்த வாலிபன்''க்கு அல்லாஹ்வின் அர்ஷின் நிழல் கிடைக்கும்''[144] என்ற நபியின் ஹதீஸிக்கு ஒப்பாக வாழ வேண்டும். எனவே இபாதாக்களின் பக்கம் அவர்களைத் தூண்டுவது கட்டாயமாகும்.

3. **தக்வாவோடு நடக்காமை:** ஒரு முஸ்லிம் எப்போதும் அல்லாஹ்வுக்கு பயந்து பணிந்து நடக்க வேண்டும். தக்வா ஒருவரிடம் இருக்கும் போது அவரின் செயற்பாடுகள் ஆரோக்கியம் மிக்கதாகவும் வினைத்தறன் மிக்கதாகவும் அமையும். தக்வாவை கடைப்பிடிப்பதில் காணப்படும் பின்னடைவு இளைஞர்கள் தீமையின் பால் விரைந்து அடிப்படையாக அமைந்தது எனலாம்.தக்வாயை கட்டியெழுப்பும் செயல்களில் இளைஞர்களைத் தூண்ட வேண்டும்.

4. **பண்பாடுகளில் சீரழிவு:** இஸ்லாத்துடன் பின்னிப்பிணைந்த ஓர் அம்சமாக காணப்படும் விடயமே பண்பாடுகளாகும் ''இஸ்லாம் என்றால் என்ன என நபி(ஸல்) அவர்களிடம் வினவப்பட்ட போது நற்பண்புகள் எனப் பதிலளித்தார்கள[145]. இஸ்லாம் விதியாக்கியுள்ள கடமைகள் கூட பண்பாடுகளை மனிதர்களிடையே ஏற்படுத்தவே ஆகும். இளைஞர்களிடையே இன்று பண்பாடுகள் அருகிவருவதால் அதனால் பன்மைத்துவ சமூக அமைப்பில் வாழும் முஸ்லிம் சமூகம் பல பாரிய பிரச்சினைகளை விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்கு உட்பட்டிருக்கின்றது.

5. **மேற்கத்தைய மோகம்** : உலகமயமாக்களின் விளைவின் கவர்ச்சி, மேற்கததைய கலாசார நாகரிக அம்சங்களின் மீதான அளவு கடந்த பற்றும் ஈடுபாடும் இளைஞர்களை பாவச் செயல்களின் பால் தூண்டியுள்ளது. மேற்கத்தைய உற்பத்திகளின் அடிமைகளாகவும் அவற்றில் அதீத பற்றுக் கொண்டவர்களாவும் முஸ்லிம் உலகும் குறிப்பாக சிறுபான்மையாக வாழும் நாட்டிலுள்ள இளைஞர்களும் மாறிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

6. **சினிமாக்களின் தாக்கம்** : இன்று இளைஞர்களை மிகவும் பாதித்துள்ள ஒரு அம்சமாக சினிமாக்கள் காணப்படுகின்றன. அதிக நேரங்களை ஈனத்தனமான உணர்வுகளையும் கீழ்தரமான சிந்தனைகளையும் தூண்டும் சினிமாக்களின் பக்கம் கழிப்பது இன்றைய சீரழிவின் குறிப்பிடத்தக்க அம்சம் எனலாம்.

எனவே, இவ்வாறான சீரழிவுகளிலிருந்து இளைஞர்களைப் பாதுகாப்பதும் இஸ்லாமிய சிந்தனைகளை அவர்களின் உள்ளங்களில் மிளிரச் செய்வதும் அனைவரினதும் தலையாயக் கடமையும் அவர்கள் மீது சுமத்தப்பட்ட அமானிதமும் ஆகும்.

**(2) இளைஞர்களை நெறிப்படுத்துவதில் இமாம் ஸயீத் நூர்ஸியின் சிந்தனைகள்**

இமாம் ஸயீத் நூர்ஸி இளைஞர்களை நெறிப்படுத்தி சீரமைப்பதற்கான சிந்தனைகளை குர்ஆன் சுன்னாவின் வழியில் நின்று சீரழிவின் விழிம்பிலுள்ளவர்களின் சிந்தனைகளைக் கிளரும் வகையில் சாமத்தியமாகவும் தர்க்க ரீரியாகவும் அணுகியுள்ளமை இங்கு ஈண்டு குறிப்பிடவல்லதாகும். இன்றைய இளைஞர்களிடம் பல வகையான சீர்திருத்தங்கள் தேவைப்பட்ட போதிலும் அவற்றுள் முக்கியமான சிலவற்றைஅடையாளப்படுத்தி அவற்றின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டுஇமாம் நூர்ஸி விளக்கியுள்ளார். அந்த வகையில் இளைஞர்களின் நெறிப்படுத்தலில் நம்பிக்கை (அல்லாஹ் மற்றும் மறுமை மீதான நம்பிக்கை) வணக்க வழிபாடுகளில் ஈடுபாடு, தக்வா, ஹராமை விட்டு விலகிக் கொள்ளல், மு∴மினின் திருப்தி போன்ற அம்சங்கள் முக்கியமானவையாகக் கொண்டு விளக்குகிறார்.

[143]ஸுறா அத்தாரியாத் அத்தியாயம: வசனம் 64
[144]நூல்கள் : புகாரி,முஸ்லிம்
[145]நூல்: அஹ்மத்

இஸ்லாத்தின் நம்பிக்கை சார்ந்த அம்சங்களில் இளைஞர்களிடையே அசையாத நம்பிக்கையை வலுப்படுத்துவதன் மூலம் உறுதியான சீர்திருத்தத்தை ஏற்படுத்த முடியும் என்பதை இமாம் அவர்கள் விளக்கியுள்ளார்.அல்லாஹ் பற்றி அவர் விளக்கும் போது

"உண்மை தான் இபிஸ்மில்லாஹ் என்ற இத்துாய கலீமா என்றும் அழியாத பொக்கிஷம். ஏனெனில் அது பிரபஞ்சத்தை விட விசாலமான மிகப்பெரிய அருளுடன் எமது தேவையை இணைக்கிறது. உனது இயலாமை பிரபஞ்சத்தின் அனைத்தையும் ஆண்டு கொண்டிருக்கின்ற பெரும் சக்தியுடன் இணைக்கப்பட்டுள்ளன. அச்சக்தியானது பிரபஞ்சத்தின் அற்ப துணுக்கு முதல் முழுப்பிரபஞ்சத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. உனது இயலாமை, வறுமை ஆகிய இரண்டும் மகத்துவமும் அருளும் மிக்க அல்லாஹ்வுக்கு முன்னால் சரணடைந்து நிற்கின்றன."[146]

ஒரு இளைஞனிடம் அல்லாஹ்வின் மீது என்றும் இருக்க வேண்டிய அசைக்க முடியாத நம்பிக்கையை இமாம் நூர்ஸி பின்வருமாறு விளக்குகிறார் "நாம் அனைவரும் அல்லாஹ்வின் நாமத்தை தினமும் கூறிவருவதுடன் அல்லாஹ்வின் நாமத்தைக் கொண்டே வழங்குவோராகவும் கொடுப்போராகவும் இருக்கவேண்டும் மேலும் அவன் நாமத்தைக் கொண்டு வழங்காது மறந்திருப்போரின் கைகளில் செல்வதையும் தடுப்பதும் எமது கடமையாகும்"[147]

இளைஞர்களை நெறிப்படுத்துவதில் மரணம் மற்றும் மறுமையை பற்றிய சிந்தனையை அவர்களின் உள்ளங்களில் ஆழமாக பதிப்பதும் உறுதிப்படுத்துவதும் பிரதான அம்சமாகும். நபி(ஸல்) அவர்களின் மக்கா கால த.்வா வழிமுறைகளிலும் இப்போக்கை நாம் கண்டு கொள்ள முடியும். மறுமையை இலக்காகக் கொண்டு வாழுதல் என்ற சிந்தனை இன்று எமது இளைஞர்களிடம் அரிதாகிக் கொண்டு செல்வதைக் காணமுடியும். இதனை நூர்ஸி விளங்கப்படுத்தும் போது "மனிதனின் தவணை மறைவான திரைச்சீலையால் மறைத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் மரணம் எந்த நேரமும் குறிப்புகள் இல்லாமல் எம்மை வந்தடையும். வாலிபர்கள், வயோதிபர்கள் என்ற வித்தியாசமின்றி ஒவ்வொரு மனிதனின் கழுத்தையும் அது தட்டுகிறது. பலவீனமான மனிதன் தன் கண்ணெதிரே திடுக்கிடச் செய்யும் இந்நிகழ்வை பார்க்கிறான் என்பதில் ஐயமில்லை. உண்மையான மு.்மின் இருள் சூழ்ந்துள் கபுரை பிரகாசமான இடமாக மாற்ற நற்செயல்களை புரிவதன் மூலம் தனது இலக்கையை சரியாக வகுத்துக் கொள்ள வேண்டும். உலகிற்கு அனுப்பப்பட்ட துாய்மையான மனிதர்களும் (நபிமார்கள்) இதனையே காலத்துக்கு காலம் அறிமுகம் செய்திருக்கிறார்கள்"[148]

மேலும் அவர "உலகின் சிற்றின்பத்திற்காக தனது மார்க்கத்தையே தியாகம் செய்து நரகத்தை சொந்தமாக்கிக் கொள்கின்ற மனிதன் எவ்வளவு பெரிய மடமையிலும் வழிகேட்டிலும் உள்ளான் என்பதை சிந்தித்துப்பார்"[149].

இஸ்லாம் ஈமானை அடுத்து அமல்களைப் பற்றி அதிகம் பேசியுள்ளதுடன் ஈமானின் அடையாளமாகவும் அமல்களை அடையாளப்படுத்தியுள்ளது. இளைஞர்களின் ஈடேற்றத்திற்கும் நிரந்தர சுவன வாழ்வுக்கும் இது அவசியம் என்தால் நூர்ஸி அவர்கள் இதனை அழுத்திப் பேசியுள்ளார்கள். அவர் வாலிபர்களை விழித்துப் பேசும் போது "உண்மையில் வாலிபர்கள் தமக்கு இறைவனால் வழங்கப்பட்ட பொன்னான நேரத்தை சரியான வழியை தெரிவு செய்து அவனுக்கு கட்டுப்பட்டு(இபாதா) வாழ்வதிலும் நன்றி பாராட்டிக் கொண்டுமிருந்தால் அல்லாஹ்வின் அருள் அதிகரித்துக் கொண்டே செல்லும். அதில் குறைவு ஏற்படாது. அது அவர்களை விட்டும் நீங்கிச் செல்லாது நிலைத்து நிற்கும்".[150]

மேலும் பெரும் குற்றங்களை புரிந்து விட்டு சிறைகளில் அவற்றுக்கான தண்டனைகளை அனுபவிக்கும் இளைஞர்களை நோக்கி "குற்றங்கள்,அநியாயங்கள் என்பவற்றுக்காக தீர்ப்பளிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள நீங்கள் அதில் கழிக்கும் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் பூரணமாக இறைவனுக்கு கட்டுப்பட்டு இபாதத் புரிவதற்காக மாற்றிக் கொள்ளமுடியும். இஸ்லாத்தின் வழியில் நின்று முறையாக கடமைகளை நிறைவேற்றினால் அது இபாதத்தாக ஆகிவிடும். உண்மையில் சிறைவாழ்வு இபாதத்திற்காக மனிதர்களைவிட்டும் ஒதுங்கி வாழ்வதற்கு ஒத்ததாகும். துறவிகள், காடுகள், குகைகள் என்பவற்றில் வாழ்வோர் அனைவரும் தமது இருப்பிடங்களை விட்டு ஒதுங்கி தனிமையில் இபாதாக்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதே போன்ற ஒன்றாகக் கருதி சிறையிலுள்ள நீங்களும் இபாதாக்களில் ஈடுபட முடியும்."[151]

மேலும் இமாம் இளைஞர்களை நோக்கி கூறும் போது " ஒருவர் பாவங்களிலிருந்து விலகி கடமைகளையும் நிறைவேற்றுபவராக இருந்தால் அவரின் முழு நாளும் இபாதத்தாக கருதப்படும். இவ்வாறு இருப்பதன் மூலம் அவரின் சிறை வாழ்வு ஈமானிய வழிகாட்டலின் கீழ் வளர்கின்ற இடம் பாசறையாக மாறிவிடுகின்றது."[152]

---

[146].முர்ஸித் அஸ்ஸபாப் ஸயீத் அந்நூர்ஸி பக்- 06
[147].மேலுது: 09

[148] .மேலது 11
[149]மேலது 34
[150]மேலது 43
[151]மேலது 44
[152]மேலது 34

இளைஞர்களிடம் வளர வேண்டிய மற்றொரு முக்கிய விடயம் தான் தக்வா ஆகும். தக்வா எனும் இறையச்சம் அவனிடம் காணப்படும் போதே தீமைகளில் இருந்து ஒதுங்கி வாழ முடியும்."தக்வா என்பது தடுக்கப்பட்டவைகளை விடுவதும் குற்றங்கள் பாவங்கள் என்பவற்றில் இருந்து விலகிவிடுவதுமாகும். மேலும் நல்லமல்கள் என்பது நன்மைகளை சம்பாதிப்பதற்காக ஏவப்பட்ட விடயங்களை செய்வதாகும்."[153]

ஆன்மாவையும் பண்பாடுகளை சீரழிக்கும் தீமைகளில் இருந்து இளைஞர் ஒவ்வொருவரும்தம்மைப் பாதுகாத்துக் கொள்ள தக்வா இன்றியமையாத தேவையாகும். இதனை இமாம் குறிப்பிடும் போது"ஆன்மாவையும் பண்பாடுகளையும் சீரழிக்கின்ற இக்காலப்பகுதியில் தக்வா மிகப்பெரிய அடிப்படையாகவும் பயங்கர அழிவிலிருந்து பாதுகாப்பவையாகவும் உள்ளன. ஒருவர் கடமைகளை நிறைவேற்றி பாவங்கள் புரிவதிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொண்டால் அல்லாஹ்வின் உதவியால் வெற்றியடைவார்."[154]

இன்று இளைஞர்கள் உலக கவர்ச்சியின் மோகம், அளவு கடந்த பேராசை,மற்றும் தற்போதைய சூழலில் இடம் பெற்று வரும் கோர சோக நிகழ்வுகள் என்பவற்றால் மானசீக ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் வாழ்கையில் நம்பிக்கையிழந்து பாவச்செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.அவர் குறிப்பிடும் போது " தீமையைத் தூண்டக்கூடிய பாவங்களைவ விட்டும் நீ வலகி விடு. அது இழிவைத் தரக்கூடியதும் குறைபாடுகளைக் கொண்டதும் தீங்குகளைத் தரவல்லதுமாகும். உனது மனோஇச்சையை வணங்கப்படக்கூடியதாக ஆக்கிக்கொள்ளாதே. நீ புரிகின்ற நன்மைகளே உனக்கு சந்தோஷத்தை தரக்கூடியது."[155]

இவ்வாறு ஸயீத் நூர்ஸி இளைஞர்களை நெறிப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை சிறப்பாக எமக்கு முன்வைத்துள்ளார்கள்.

### (3) சிறுபான்மை நாடுகளில் இஸ்லாமிய இளைஞர்களை நெறிப்படுத்துவதில் இமாம் ஸயீத் நூர்ஸியின் சிந்தனையின் முக்கியத்துவம்

இஸ்லாமிய நவீன முன்னோடிகளில் ஆளுமைமிக்க ஒருவராக ஸயீத் நூர்ஸி விளங்குகிறார். "19ம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் (1876- 1960) சீர்சிருத்த பணி செய்து பெரும் மாற்றத்தை உண்டாக்கிய ஒரு பெருந்தகையே நூர்ஸி"[156]. மேலும் "அவர் ஒரு போராட்ட வீரராகவும் தளபதியாகவும் அல் குர்ஆன் விரிவுரையாளராகவும் பன்னூல் ஆசிரியராகவும் விளங்கினார்"[157]உஸ்மானிய சாம்ராஜியத்தின் அந்திம காலப்பகுதியல் தோன்றிய பிழையான சிந்தனைகளின் தாக்கம் அவை முஸ்லிம் உம்மாவில் ஏற்படுத்திய எதிரிடையான தாக்கங்களையும் வலியையும் நன்கு உணர்ந்தவர். "துருக்கியில் கிலாபத் ஆட்சியை கவிழ்ப்பதற்காக தோற்றம் பெற்ற மேற்கின் அருடிவருடிகளாகவும் அதன் சிந்தனைகளை பரப்பவும் உருவாக்கப்பட்ட துருக்கிய வாலிப அமைப்பு ( جمعية الفتاة التركية ) இஇளைஞர்களையும் நாட்டையும் சீரழிப்பதிலும் இஸ்லாமிய சிந்தனையில் கலங்கத்தை ஏற்படுத்துவதிலும் கடுமையாக ஈடுபட்டனர். இதன் பின்புலத்தில் யூதர்கள் இருந்து செயற்படுத்தினர். சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் அவர்களினால் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்த அடையாளங்கள் யாவும் சிதைவுபடுத்தப்பட்டன."[158]

இந்த நிகழ்வு நூர்ஸிக்கு கவலையை ஏற்படுத்தியதுடன் அவரின் போக்கில் பெரும் மாற்றத்தையும் ஏற்படுத்தியது. எனவே, சிந்தனா ரீதியான மாற்றத்தை மக்களிடமும் மாணவர்களிடமும் ஏற்படுத்தும் வகையில் ரஸாயில் அந் நூர் எனும் 10 வலியூம்களைக் கொண்ட பெரும் நூலை எழுதி அதன் முதல் பாகமான "(The Words)இல் உப தலைப்புக்களில் ஒன்றாக "மறுமையை நோக்கிய இளைஞர்களுக்கான வழிகாட்டி" எனும் நூலினை எழுதிஇளைஞர்களை நெறிப்படுத்துவதற்கான விடயங்களை விளக்கியுள்ளார். துருக்கியில் பெரும் மாற்றத்தை இளைஞர்களிடையே ஏற்படுத்துவதில் இந்நூல் பெரும் தாக்கத்தை விளைவித்தது. சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் இளைஞர்களுக்கும் அவர்களின் சிந்தனையில் திருப்பத்தை ஏற்படுத்தவும் இமாம் நூர்ஸியின் சிந்தனை மிக முக்கியமாக தேவைப்படுகிறது. இச்சிநதனையின் தேவைப்பாட்டினை பின்வரும் குறிகாட்டிகளில் நாம் விளங்கிக் கொள்ளலாம்.

- **மேற்கத்தைய சிந்தனைகளின் தாக்கம் சிறுபான்மை நாடுகளை அதிகமாகப் பாதித்துள்ளமை:** காலனித்துவம், கிரிஸ்தவமயகாக்கல் என்பதன் கேந்திர ஸ்தானங்களாக விளங்கிய கீழைத்தேய நாடுகள் அதிலும் குறிப்பாக தென்னாசிய மற்றும் தூர கிழக்காசிய நாடுகளில் இவற்றின் பிரதிபலிப்பும் தாக்கமும் அதிகமாகவே காணப்பட்டன."நவகாலனித்துவம், கிரிஸ்தவமயமாக்கல் என்பன அதிகமாக

[153] மேலது 136
[154] .மேலது 137
[155]மேலது 155

[156]இஹ்ஸான் காஸிம்: புதிஉஸ் ஸமானின நூர்ஸியின் வாழ்கையும் அவரின் சிந்தனைத் தாக்கமும்,sozler Nesriyat .S.
[157] மேலது : பக்: 08
[158]ஆப்துல்லாஹ் தல் 1971'இஸ்லாத்தைக் கருவறுப்பதில் யூத நச்சுப் பாம்புகள் :பக்; 38

தென்னாசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் அதிகமாக காணப்பட்டுள்ளன. யூத பின்புலங்களின் தூண்டுதலும் இதற்கு பின்னால் வரலாற்று காலங்களில் நெடுகிலும் இருந்து வந்துள்ளன.இந்தோனேசியா போன்ற நாடுகள் இத்தகைய நடவடிக்கைகளுக்கு இரையாகவேண்டிய நிலை தோன்றியது.''[159]

- **மதச்சார்பின்மை அதிகமாக காணப்பட்டமை:** மேற்கத்தைய பொருளாதார சிந்தனைகள், கம்யூசத்தின் தாக்கம் என்பவற்றுக்கு முதன்மை இடம் வழங்கப்பட்டு, மதச்சார்பின்மை (secularism)சமூக நீதியாகவும் மக்களிடம் அடையாளப்படுத்தப்பட்டது. இத்தகைய சிந்தனைத் தாக்கங்களில் அதிகம் பலிக்கிடாவாக்கப்பட்டவர்கள் இளைஞர்களாகவே காணப்பட்டனர். இலங்கை, இந்தோனேசியா, இந்தியா போன்ற நாடுகளை முன்மாதிரியாகக் குறிப்பிடலாம். பேராசியர் முஸ்தபா சிபாயி குறிப்பிடும் போது ''மதச்சார்பின்மை, காலனித்துவம், சிந்தனை மாற்றம், மேற்கத்தைய சிந்தனைகள் என்பன கீழைத்தேய நாடுகளில் அதிக பிராயச்சித்தத்துடன் திட்டமிட்டு முன்னெடுத்துச் செல்லப்பட்டன. கீழைத்தேய கற்கைகள் ஐரோப்பிய பல்கலைகழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அவர்களின் இந்நடவடிக்கைகள் சிந்தனை மாற்றத்தில் பெரிதும் செல்வாக்கு செலுத்தின.''[160]

- **நூர்ஸியின் சிந்தனை நடுநிலைப்போக்குக் கொண்டுள்ளமை:** இமாம் நூர்ஸியின் சிந்தனைகளை நோக்கும் போது நடுநிலைப் போக்கு தென்படுவதை எவரும் எளிதாக புரிந்து கொள்ளக் கூடிதாக இருக்கும். இத்தகைய போக்கு சிறுபான்மை நாடுகளில் இளைஞர்களை நெறிப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும். ''மறுமை வெற்றியை நோக்கிய இளைஞர்களுக்கான வழிகாட்டி '' என்ற நூலில் சிறைகளில் இமாம் நூர்ஸி சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இளம் கைதிகளுக்கான வழிகாட்டல்களிலும் அவர்களுடனான கலந்துரையாடல்களின் மூலமும் நாம் இதனை அறிந்து கொள்ள முடியும்.

- **நூர்ஸியின் சிந்தனைகளில் தூய்மையான சூபித்துவமும் ஆன்மீக உயிரோட்டமும் தென்படுகின்றமை** : தென் ஆசியா மற்றும் கிழக்காசிய நாடுகளில் இஸ்லாத்தின் பரவலுக்கு சூபி தரீக்காக்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.''கிழக்காசிய நாடுகளில் சூபிகள், தரீக்காக்கள்,ஸாவியாக்கள் என்பன பாரிய பங்களிப்புக்களை செய்துள்ளன. அதன் இடத்தை எந்த சமூக அமைப்பும் இயக்கங்களும் இன்று அடையவில்லை என்பதை நாம் எவரும் மறுக்கமுடியாது.''[161]

  எனவே இத்தகைய நியாயங்களின் அடிப்படையில் நோக்கும் போது நூர்ஸியின் சிந்தனை இளைஞர்களை நெறிப்படுத்துவதற்கு சிறுபான்மை முஸ்லிம் நாடுகளில் மிகப் பொருத்தமானது என்பதைப் புரியலாம்.

**(4) இமாம் ஸயீத் நூர்ஸியின் சிந்தனைகளை இளைஞர்களிடையே முன்கொண்டு செல்வதிலுள்ள தடைகள்:**

இவ்வாய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளர்களின் பன்முக தரப்படுத்தலின் அடிப்படையிலான வரையறுக்கப்பட்ட நேர்காணல், அவதானம் என்பவற்றின் முடிவுகளின் அடிப்படையில் நோக்கும் போது நூர்ஸியின் சிந்தனைகளில் இளைஞர்களுக்கான வழிகாட்டல்கள் அதிகமாக காணப்பட்ட போதிலும் முஸ்லிம் சிறுபான்மை நாடுகளில் அச்சிந்தனைகள் பெரும் செல்வாக்கைச் செலுத்தவில்லை. அச்சிந்தனைகளை மக்களிடம் நகர்த்துவதில் பல குறைபடுகளும் தடைகளும் இருப்பதை உணர முடிகின்றது. அவை வருமாறு:

- **நூர்ஸி பற்றிய அறிமுகம் குறைவாக உள்ளமை:** முஸ்லிம்களிடம் அறிமுகமாகி ஆழப்பதிந்துள்ள பழைய நவீன அறிஞர்களின் பிரபல்யத்தைப் போன்று இவர் பற்றிய அறிமுகம் காணப்படாமை பிரதான காரணமாகும்.

- **நூர்ஸியின் சிந்தனைகளை தெளிவுபடுத்தும் வகையிலான நூல்கள் தேசிய மொழிகளில் பெரியளவு காணப்படாமை:** ஆரம்ப காலங்களில் அறவே நூர்ஸி சிந்தனைகள் தொடர்பான நூல்கள் காணப்படாமல் இருந்தது. ஆனால் இன்று ஓரளவு அந்த இடைவெளி நிரப்பப்படுவதை காணமுடிகின்றது. எனினும் அவர் சிந்தனைகள் பாரியளவிலான ரீதியில் இன்னும் கொண்டு செல்லப்படவில்லை. அவரின் நூல்கள் தேசிய ரொழிகளில் மொழி பெயர்க்கப்படவேண்டும்.

- **உஸ்மானிய கிலாபத்தின் வீழ்ச்சியின் பின்னர் இஸ்லாத்தை பரப்புவதன் மீதும் இஸ்லாமிய முன்னொடிகளின் மீதும் துருக்கியில் தடைகள் விதிக்கப்பட்டிருந்தமை:** முஸ்தபா கமால் அதா துர்க் ஆட்சி பீடம் ஏறிய பின்னர் இஸ்லாத்தை பரப்பவும் இஸ்லாமிய அறிஞர்கள் சுதந்திரமாக பிரச்சாரப்பணிகளில் ஈடுபடவும்

159. மேலது பக்:39.
160 முஸ்தபா ஸிபாயி 1988'அல் இஸதஸ்ராக் வல்முஸ்தஸ்ரிகூன்' பக் 76

161 . கமருத்தீன் 1997,கிழக்காசிய நாடுகளில் இஸ்லாத்தின் பரவல்'' பக்: 29

தடைகள் விதிக்கப்பட்டன. "முன்னேற்றகரமான சிந்தனைகளுக்கும் இஸ்லாத்தை பரப்புவதற்கும் தடைகள் சட்டரீதியாக விதிக்கப்பட்டன. மதச்சார்பற்ற சிந்தனைகளைக் கொண்டதாக துருக்கி இருக்கும் என அறிவிப்பும் செய்யப்பட்டது"[162].

- **இமாம் நூர்ஸிஅரபு உலகத்திலும் இஸ்லாமிய அறிஞர்களுக்கு மத்தியிலும் வெறும் ஒரு சூபியாக மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தமை** : நூர்ஸியின் அதிகான நூல்களின் மூல மொழியாக துருக்கி மொழி காணப்பட்டதால் இஸ்லாமிய உலகத்திற்கு நூர்ஸி பற்றிய அறிமுகம் முறையாகச் சென்றடைவில்லை என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

- **அரபு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட இமாம் நூர்ஸியின் பெறுமதியான நூல்கள் பாடசாலைகள்,பல்கலைகழகங்கள் ஆகியவற்றின் கலைத்திட்டங்களில் சேர்க்கப்படாமை:** இஸ்லாத்திற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் தொண்டு புரிந்தவர்களின் நாமங்கள் வரலாற்றில் எழுதப்பட்டுள்ளதை நாம் காணலாம். எனினும் நூர்ஸியின் சிந்தனைகள் வரலாறு பாட நூல்களிலோ அல்லதுஆய்வாகவோ அதிகமாக பேசப்படும் அளவு முன்வைக்கப்படவில்லை. இதனால் அவரின் சிந்தனைகள் பெரியளவு சிறுபான்மை நாடுகளில் ெல்வாக்குப் பெற்றதாக இருக்கவில்லை.

- **இஸ்லாத்தை அல்லது மார்க்க விடயங்களை விளங்கிக் கொள்வதில் மக்களில் பெரும்பானோர் கவனம் செலுத்தாமை:** இந்நிலை முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளில் மக்களிடம் அதிகமாக காணப்படுகிறது. மார்க்கத்தை விளங்கிக் கொள்வதில் காட்டும் அக்கறையின்மை இத்தகைய பெறுமதியான சிந்தனைகளை தெரிந்து கொள்வதிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**பெறுபேறுகள் (Findings)**

இவ்வாய்வாரள்கள் தமது ஆய்வின் பெறுபேறுகளாக பின்வரும் அம்சங்களை முன்வைக்கின்றனர்.

1. இமாம் பதிஉஸ் ஸமான் நூர்ஸியின் சிந்தனைகள் இளைஞர்களையும் இஸ்லாமிய சமூகத்தையும் சீரான பாதையைநோக்கி நகர்த்துவதற்கு மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளன.

2. இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களை நடைமுறை உதாரணங்களுடன் தெளிவுபடுத்தும் வல்லமையும் தர்க்க ரீதியான ஞானமும் நூர்ஸியிடம் காணப்படுகிறது.

3. சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் மக்களையும் இளைஞர்களையும் சீர்படுத்துவதற்கு பதீஉஸ் ஸமானின் சிந்தனைகள் மிகவும் பயனுள்ளதாக அமைகிறது.

4. பாடசாலைகள், கல்விக்கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றின் பாடத்திட்டங்களில் நூர்ஸியின் இளைஞர்களை நெறிப்படுத்தும் சிந்தனைகள் அறவே சேர்க்கப்படவில்லை.

5. நூர்ஸியின் சிந்தனைகளைப் பரப்பும் வகையிலான ஊடகங்கள் காணப்படாமை குறிப்பிடத்தக்கதாகும்.

6. சிறுபான்மை நாடுகளில் நூர்ஸியின் சிந்தனைகளை தெளிவுபடுத்தும் விடயத்தில் பாரியளவிலான ஆளுமைகள் காணப்படாமையும் அதனால் பாரிய இடைவெளி நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**பரிந்துரைகள்( Recommendations)**

இவ்வாய்வின் முடிவில் ஆய்வாளர்கள் பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கின்றனர். அவை வருமாறு:

1. இமாம் நூர்ஸியின் சிந்தனைகள் இளைஞர்களை நெறிப்படுத்துவதற்கு பெரிதும் உறுதுணையாக அமைவதால் அதனை முறையாக அவர்களிடம் கொண்டு செல்வதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.
2. பொருத்தமான நடைமுறை உதாரணங்களுடன் முன்வைக்கப்படும் நூர்ஸியின் சிந்தனைககள் இளைஞர்களின் உள்ளங்களில் மிகுந்த தாக்கத்தையும் செல்வாக்கையும் செலுத்தக் கூடியவை.
3. சிறுபான்மை நாடுகளில் உள்ள இளைஞர்களை நெறிப்படுத்த நூர்ஸியால் முன்வைக்கப்பட்ட சிந்தனைகளை் மக்கள் மயப்படுத்தப்படுவதுடன் பல மட்டங்களின் கலந்துரையாடப்படும் அம்சமாகவும் மாறவேண்டும்.
4. பாடசாலைகள்,பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் குறிப்பாக இலங்கையிலுள்ள அரபுக்கல்லூரிகள் ஆகியவற்றின் கலைத்திட்டமாக நூர்ஸியின் நூல்கள் உள்வாங்கப்பட வேண்டும்.
5. அச்சு இலத்திரனியல் ஊடகங்களின் வழியாக நூர்ஸின் சிந்தனைகள் மக்களிடையேயும் மாணவர்களிடையேயும் முன்வைக்கப்பட வேண்டும்.

[162]முஹம்மது அவ்ரகான அலி 1978, இரண்டாம அப்துல் ஹமீத்: பக்: 98

**உசாத்துணைகள்**


1) பதீஉஸ் ஸமான் ஸஈத் நூர்ஸி 2003, இளைஞர்களுக்கான வழிகாட்டி,Istanbul ,Sozler publication, Istanbul.
2) பதிஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி 2014, மறுமைச் சகோதரிகளுக்கான வழிகாட்டி,துருக்கி,ருபா வக்பு , துருக்கி
3) மௌலானா மௌதூதி 1978 “ دور الطلبة الإسلامية فى بناء المجتمع الإسلامي” தாருல் குத்ப் லெபனான் 1978
4) Tamimi &Esposito (edit)2000, Islam and secularism in the Middle East, Harst London 2000.
5) அப்துல் அஸீஸ் 1988, வட ஆபிரிக்காவில் கிரிஸ்தவமயமாக்களும் காலனித்துவ ஆதிக்கமும், தார் அந்நஹ்ழா கெய்ரோ.
6) அலிஅவ்ரகான் முஹம்மத் 1988, السلطان عبد الحميد الثانى حياته وآثاره தாருல் குத்ப் பெய்ரூத்.
7) கமருத்தீன் 1987, தென்கிழக்காசிய நாடுகளில் இஸ்லாத்தின் பரவல், மலே மொழி பதிப்பகம்
8) பத்ஹி யக்கன் 1988, العالم الإسلامي والمكائد الدولية, தாருஸ் ஸுரூக், கெய்ரோ, 1974
9) அப்துல் லத்தீப் 1980 , கீழைத்தேய அபாயங்கள் அதனை எதிர்வு கொள்வது எவ்வாறு? ,தாருல் குத்ப் பெய்ரூத்.
10) Ania loomba,1998, Colonilism and post colonialism, Root ledge, Newyork.